**(2023-24-**ஆம் கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்ட மாணவ-மாணவியருக்கு மட்டும்) (பக்கங்களின் எண்ணிக்கை : 2 )

**SUBJECT CODE** **23 UTM 614**

**REG.NO:**

என்.ஜி.எம். கல்லூரி (தன்னாட்சி) :: பொள்ளாச்சி

பருவ இறுதித் தேர்வுகள் : மே - 2026

பி. ஏ. தமிழ் இலக்கியம் மதிப்பெண்கள் : 75

ஆறாவது பருவம் நேரம் : 3 மணி

**பகுதி – 3**

***சங்க இலக்கியம் - பத்துப்பாட்டு***

**பகுதி – அ** **(10x1=10** மதிப்பெண்கள்)

பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (K1)

1. *''உலகம் உவப்ப வலன் ஏர்பு திருதரு'' என்று தொடங்கும் பாடல்* இடம் பெற்ற நூல் எது?

   *அ) பட்டினப்பாலை ஆ) பதிற்றுப்பத்து இ) திருமுருகாற்றுப்படை ஈ) முல்லைப்பாட்டு*

2. *'யாணர்' - பொருள் தருக.*

   *அ) திருவிழா ஆ) கப்பல் இ) யவனர் ஈ) புது வருவாய்*

3. '*ஐயவி' என்பது* ..................

   *அ) நெல் ஆ) நெய் இ)* **தினை** *ஈ) கடுகு*

4. '*துச்சில்' என்பது* ................

   *அ) செறுகளம் ஆ) படுகளம் இ) நிரந்திர இடம் ஈ) தற்காலிக இடம்*

5. '*பிடவ மலர்' மலரும் நிலப்பகுதியைச் சுட்டுக.*

   *அ) குறிஞ்சி ஆ) முல்லை இ) மருதம் ஈ) நெய்தல்*

கீழ்க்காணும் அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக. (K2)

6. ''*சூர்முதல் தடிந்த சுடரிலை நெடுவேல்'' - இந்தப் புலவராற்றுப்படை வரியில் 'சூர்' என்பதன்* பொருள் யாது?

7. *'வேளாண் வாயில்'* எனறால் என்ன?

8. *'தச நான்கு' – பொருள்தருக.*

9. "*புள் தேம்பப் புயல் மாறி'' - விளக்கம் தருக.*

10. '*கவலை முற்றம்' – பொருள்தருக.*

பகுதி - ஆ

கீழ்க்காணும் வினாக்களுக்கு இரு பக்க அளவில் விடை தருக. **( 5 X 5 = 25** மதிப்பெண்கள் **)**

11. அ) *''கடம்ப மாலை புரளும் மார்பினன்'' இடம் சுட்டிப் பொருள் விளக்குக.*

    (அல்லது)

    ஆ) *சூரரமகளிரின் இயல்புகளைப் பட்டியலிடுக.*

12. அ) *பாலை யாழின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் பொருநராற்றுப்படையின்வழி விளக்குக.*

    (அல்லது)

    ஆ) *"தாய் வயிற்றிருந்து தாயம் எய்தி" –எனும் பொருநராற்றுப்படை வரியின் வரலாற்றினை விவரி.*

(த.பி.பா.)

***ETHICAL PAPER***

13. அ) நெடுநல்வாடையில் சேடியரும் செவிலியரும் தலைவியைத் தேற்றும் நிலையை உளவியல் நிலையில் இயம்புக.

(அல்லது)

ஆ) நெடுநல்வாடை காட்டும் அரசனின் நிலையைப் பட்டியலிடுக.

14. அ) புகார் நகரில் நுடங்கிய குறியீட்டுக் கொடிகள் குறித்து எழுதுக.

(அல்லது)

ஆ) பரதவ மக்களின் தொல்வழிபாட்டினைப் பட்டினப்பாலையின்வழி உரைக்கவும்.

15. அ) குறிஞ்சிப்பாட்டு கூறும் மாலைநேரக் காட்சியை விளக்குக.

(அல்லது)

ஆ) முல்லைப்பாட்டு சுட்டும் வேற்றுநாட்டு வீரர்கள் குறித்து எழுதுக..

## பகுதி – இ ( 5 X 8 = 40 மதிப்பெண்கள் )

**கீழ்க்காணும் வினாக்களுக்கு கட்டுரை அளவில் விடை தருக.** **(K4(Or)K5)**

16. அ) முருகனின் திருவுருவச் சிறப்பினைத் திருமுருகாற்றுப்படையின்வழி ஆராய்க.

(அல்லது)

ஆ) திருமுருகாற்றுப்படையினை முருகியல் நோக்கில் திறனாய்க.

17. அ) பாடினியின் கேசாதிபாத வருணனையை அழகியல் நோக்கில் ஆய்க.

(அல்லது)

ஆ) தமிழரின் விருந்தோம்பல் மரபினைப் பொருநராற்றுப்படையின் மூலம் நிறுவுக.

18. அ) கூதிர்காலத்தின் விளைவுகளை நெடுநல்வாடையின்வழி விவரி.

(அல்லது)

ஆ) தமிழரின் கட்டடக்கலை நுட்பத்தினை நெடுநல்வாடையினைக் கொண்டு மதிப்பிடுக.

19. அ) புகார் நகரின் கட்டமைப்பினைப் பட்டினப்பாலையின் வழி சுட்டுக.

(அல்லது)

ஆ) கடியலூர் உருத்திரங்கண்ணனாரின் எடுத்துரைப்பு, படைப்பாக்க நுட்பத்தினைப் பட்டினப்பாலையின்வழி விவரிக்க.

20. அ) குறிஞ்சிப்பாட்டில் பொதிந்துள்ள குறிஞ்சிநில வழக்காறுகளை ஆராய்க.

(அல்லது)

ஆ) முல்லைநிலப் பண்பாடுகளை முல்லைப்பாட்டின் வழி நிறுவி, இன்றும் தொடரும் அதன் எச்சங்களைச் சுட்டியுரைக்க.

***ETHICAL PAPER***

*******